# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ** **அதிவிசேஷமானது**

අංක 1704/12 - 2011 මැයි 04 වැනි බදාදා - 2011.05.04

***1704/12 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : தெஹி/காணி/1/2/28 (ii).
கா. அ. இல. : 13/97/ஈ/597.

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை 1686/10 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் III ஆம் பிரிவு காணியின் கீழ் காணிகளை அரசிற்குப் பெறுதல் பற்றிய அறிவித்தலில் 1ஏ மற்றும் 2ஏ பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேகாலை மாவட்டத்தில், தெஹிஓவிட பிரதேச செயலகப் பிரிவிற்கு உரித்தான, காணி சுவீகரித்தல் பற்றிய 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் 2 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள உரித்துப் பரிசோதனை தினம் மற்றும் நட்ட ஈட்டுப் படிவங்களை முன்வைப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள தினம் கீழே குறிப்பிடப் பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட வேண்டுமென உரித்துள்ள அனைவருக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு தெஹிஓவிட பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். ரீ. ஆர். நாலிகா பியசேன,
பிரதேச செயலாளர்,
தெஹிஓவிட.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தெஹிஓவிட,
2011.04.08.

05-407

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.